இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 25-07-2025

# தன்கர் விலகலின் பின்னணி!

ஜெகதீப் தன்கர் என்ற தனிமனிதருக்காக வருத்தப்பட ஏதுமில்லை. ஆனால் குடியரசுத் துணைத் தலைவருக்கே இந்தக் கதி தானா? என்பது வேதனை தரத்தக்கது ஆகும்.

இந்தியாவின் 14வது குடியரசுத் துணைத் தலைவராக 2022 ஆகஸ்ட் 11ஆம் தேதி ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார். மூன்று ஆண்டுகளாக குடியரசுத் துணைத் தலைவராகப் பதவி வகித்து வந்த நிலையில், திடீரென அவர் தனது பதவியில் இருந்து விலகி இருக்கிறார். ‘2027 வரை நான் பதவியில் இருப்பேன்’ என்று சில நாட்களுக்கு முன்னால் சொன்னவர் அவர். ஆனால் திடீரென்று பதவி விலகல் கடிதத்தை, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு, ஜெகதீப் தன்கர் அனுப்பினார். மருத்துவக் காரணங்களுக்காக குடியரசுத் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து விலகுவதாக தன்கர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர்தான், நாடாளுமன்ற மாநிலங்களவையை வழிநடத்தும் அவையின் தலைவராவார். பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21 ஆம் தேதி தொடங்கிய நிலையில், மாநிலங்களவையை ஜெகதீப்தன்கர் தான் வழிநடத்தினார். அப்போது நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க நோட்டீஸ் தீர்மானம் தொடர்பான மனுக்களை அவரிடம் அனைத்துக்கட்சி எம்.பி.க்களும் வழங்கினர். இந்தச் சூழலில் பதவியில் இருந்து விலகுவதாக ஜெகதீப் தன்கர் திடீரென அறிவித்துள்ளார். மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாள் கூட்டம் முடிந்ததும் 21 ஆம் தேதியன்று அவர் பதவி விலகி இருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

**“அரசியல் அழுத்தம் காரணமாகவே ஜெகதீப் தன்கர் பதவி விலகியுள்ளார்” என்று மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு விமர்சித்துள்ளார்.**

**“தன்கரின் திடீர் விலகல் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அதிர்ச்சியளிக்கிறது. அன்றைய தினம் மதியம் ஒரு மணியளவில் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் ஒன்றிய அமைச்சர்கள் ஜே.பி.நட்டா, கிரண் ரிஜிஜூ ஆகியோர் பங்கேற்ற நிலையில், மாலையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இருவரும் பங்கேற்கவில்லை. இந்த இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன? 22 ஆம் தேதி மதியம் 1 மணிக்கு அலுவல் ஆலோசனைக் குழுக் கூட்டத்தை ஜெகதீப் தன்கர் ஏற்பாடு செய்திருந்தார். நீதித்துறை தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளையும் இன்று வெளியிடப்போவதாக தன்கர் கூறியிருந்தார். ஆனால், இரவோடு இரவாக ஜெகதீப் தன்கர் ராஜினாமா செய்திருப்பது புரியாத புதிராக உள்ளது” என்று கூறியுள்ளார் ஜெய்ராம் ரமேஷ்.**

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்க தீர்மான நோட்டீஸ் விவகாரத்தில் பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் நெருக்கடியால் ஜெகதீப் தன்கர் பதவி விலகினாரா? என்பதே எதிர்க்கட்சிகள் எழுப்பும் சந்தேகம் ஆகும்.

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மா வீட்டில் கட்டுக் கட்டாகப் பணம் கைப்பற்றப்பட்டது. இது உண்மை என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் விசாரணையும் உறுதி செய்தது. எனவே, அவரை பதவி நீக்கம் செய்ய அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்தி வருகிறார்கள். நீதிபதி யஷ்வந்த் வர்மாவை பதவியில் இருந்து நீக்க 208 எம்.பி.க்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். நீதிபதி பதவியில் இருந்து ஒருவரை நீக்க வேண்டுமானால் 100 மக்களவை உறுப்பினர்களும், 50 மாநிலங்களவை உறுப்பினர்களும் அந்த நோட்டீஸில் கையெழுத்துப் போட்டிருக்க வேண்டும்.

145 மக்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் மக்களவை தலைவர் ஓம்பிர்லாவிடம் தரப்பட்டது. 63 மாநிலங்களவை உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்ட நோட்டீஸ் குடியரசுத் துணைத் தலைவரும் மாநிலங்களவை அவைத் தலைவருமான ஜெகதீப் தன்கரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்ட தீர்மானத்தைப் பெற்றதாக தன்கர் ஒப்புக்கொண்டார், அவர்களின் கையொப்பங்களைச் சரிபார்ப்பதாகவும் கூறினார். டெல்லி நீதிபதியை நீக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த தீர்மானத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார். விதிகளின்படி செல்வதைத் தவிர தன்கருக்கு வேறு வழிகள் இல்லை. ஆனால் இதனை பா.ஜ.க. தலைமை விரும்பவில்லை. இதுதான் தன்கர் பதவி விலகலுக்கு காரணமாக அமைந்து விட்டது.

**பா.ஜ.க.வின் பவர் பாலிடிக்ஸும் இதற்குப் பின்னணியாக உள்ளதாகச் சொல்லப்படுகிறது. 75 வயதை அடைந்தவர்கள் அரசியலில் இருந்தும் பதவியிலிருந்தும் ஓய்வு பெற வேண்டும் என ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் அண்மையில் பொதுவெளியில் பேசியிருந்தார். விரைவில் 75 வயதை நெருங்க உள்ள பிரதமர் மோடியை குறிப்பிட்டே மோகன் பகவத் பேசியதாக சர்ச்சை எழுந்தது. மோகன் பகவத்தின் பேச்சுக்கும், தற்போது ஜெகதீப் தன்கரின் பதவி விலகலுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும் டெல்லி தகவல்கள் சொல்கின்றன.**

ஜெகதீப் தன்கரின் பதவிக்காலம் 2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை இருந்தாலும், தற்போது அவருக்கு 74 வயதாகிறது. விரைவில் 75 வயதை எட்ட உள்ள பிரதமர் மோடிக்கு நெருக்கடி கொடுக்கவே, ஜெகதீப் தன்கரை ராஜினாமா செய்ய வைத்திருக்கிறது நாக்பூர் மேலிடம் என்றும் சொல்கிறார்கள்.

**எப்படிப் பார்த்தாலும் பா.ஜ.க. பூதம், ஜெகதீப் தன்கரை விழுங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். குடியரசுத் துணைத் தலைவரையே அவர்கள் எந்தளவுக்கு மதித்துள்ளார்கள் என்பதும், எந்த வகையில் நடத்துகிறார்கள் என்பதும் இதன் மூலமாகத் தெரிகிறது. இந்திய மக்களாட்சி நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து நசுக்கும் காட்சியாகவே தன்கரை துரத்தியதைப் பார்க்க வேண்டும்.**



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (23.07.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் ராஜேந்திர ரத்னூ, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலோண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில் – அவர் உருவாக்கிய

# சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப்பணி - சுற்றுலாப் பணிகள் மேற்கொள்ளப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 25 -

மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும், சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படுவது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் எனப் பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் இராசேந்திர சோழனின் பிறந்தநாளான ஆடித் திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட 2021ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு!**

**அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழப் பேரரசின் வரலாற்றுச் சிறப்புகளையும் கடல் கடந்த வணிகத் தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல் நாட்டினேன். காண்போரைக் கவர்ந்திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது.**

**இவற்றின் தொடர்ச்சியாக, இராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகளும் - சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் மக்களிடம் விண்ணப்பங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பெற்றுக் கொண்டு, விவரங்களைக் கேட்டறிந்தார்!

புதுக்கோட்டை. ஜூலை 25-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் சுயஉதவிக்குழு கட்டடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 22.07.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் சுயஉதவிக்குழு கட்டடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறியப்பட்டது.

2 மேலும், 23.07.2025 அன்று “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, இலுப்பூர் பேரூராட்சி பகுதி பொதுமக்களுக்கு இலுப்பூர், அந்தோணியார் தெரு, திருவள்ளுவர் மக்கள் மன்றத்திலும், திருவரங்குளம் 2 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு பூவரசக்குடி சமுதாயக் கூடத்திலும், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு குளவாய்ப்பட்டி சேவை மையக் கட்டிடத்திலும், கறம்பக்குடி 1 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு முத்து லெட்சுமி திருமண மண்டபத்திலும், புதுக்கோட்டை 2 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு பெருங்களூர் பிடாரி அம்மன் திருமண மஹாலிலும் நடைபெற உள்ளது.

அதனடிப்படையில் இம்முகாமானது, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாநகராட்சி பகுதியில் 29 முகாம்களும், அறந்தாங்கி நகராட்சி பகுதியில் 10 முகாம்களும், பொன்னமராவதி, கறம்பக்குடி, ஆலங்குடி, கீரனூர், கீரமங்கலம், இலுப்பூர், அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய 8 பேரூராட்சி பகுதிகளில் தலா இரண்டு வீதம் 16 முகாம்களும், ஊராட்சி பகுதிகளில் 151 முகாம்களும், பெரிய நகரங்களில் 7 முகாம்களும் ஆக மொத்தம் 213 முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடத்தப்பட உள்ளன. இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில், 19 முகாம்கள் நடைபெற்றதில் 4,844 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 365 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

முன்னதாக, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆலங்குடி பேரூராட்சி, மங்கள மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

இம்முகாம்களில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ரேவதி, ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேஸ்வரி பழனிக்குமார், உதவி செயற்பொறியாளர் தமயந்தி, வட்டாட்சியர்கள் பி.வில்லியம் மோசஸ் (ஆலங்குடி), க.கருப்பையா (அறந்தாங்கி) பேரூராட்சி செயல் அலுவலர் இ.கோமதி மற்றும் கே.பி.கே.டி.தங்கமணி, எல்.குமார் (எ) துரைக்கண்ணு, சண்முகநாதன், ஆர்.வி.செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் சுயஉதவிக்குழு கட்டடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் 22.07.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு, விவரங்களைக் கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி. ராமச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.